

சென்னை தென்மேற்கு மாவட்ட வர்த்தக அணி மாவட்ட துணைத் தலைவர் க.மதியழகன் இல்ல திருமண விழாவில் கழக துணைப் பொதுச் செயலாளர் ஆ.இராசா எம்.பி. கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினார். உடன் பகுதிச் செயலாளர் கே.ஏழுமலை,மாநில துணை தலைவர் எஸ்.மோகன், மாவட்ட அமைப்பாளர் மயிலை ஆர்.பாலு மற்றும் துணை அமைப்பாளர்கள் கோ.சு.கருணாநிதி,வே.மாயா,பி. கோவிந்த் கலந்து கொண்டனர்.

### கரூர் மாவட்ட தி.மு.க. சார்பில் கரூர் - அரவக்குறிச்சி - கிருஷ்ணராயபுரம் - குளித்தலை

# தொகுதிக்குட்பட்ட பி.எல்.ஏ.-2 - பி.டி.ஏ. ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் வி.செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ. அறிக்கை!



கரூர், அக். 29 .

'என் வாக்குச்சாவடி... வெற்றி வாக்குச்சாவடி' எனும் பெயரில் கரூர் மாவட்டக் கழகத்தின் சார்பில் கரூர், அரவக்குறிச்சி, கிருஷ்ணராயபுரம், குளித்தலை சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட BLA2 , BDA( பூத் IT Wing) ஆலோசனைக் கூட்டம் இன்று நடைபெறுகிறது என கரூர் மாவட்டக் கழகச் செயலாளர் வி செந்தில்பாலாஜி எம்.எல்.ஏ. தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவரது அறிக்கை வருமாறு:

கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்களின் வழிகாட்டுதலின்படி, தமிழ்நாடு தலைகுனியாது என் வாக்குச்சாவடி... வெற்றி வாக்குச்சாவடி கரூர் மாவட்டக் கழகத்தின் சார்பில் கரூர், அரவக்குறிச்சி, கிருஷ்ணராயபுரம், குளித்தலை சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட BLA2 , BDA( பூத் IT Wing) ஆலோசனைக் கூட்டம் 29.10.2025 புதன் கிழமை மாலை 5.30 மணிக்கு கரூர் பிரேம் மஹாலில் மாவட்டக் கழக அவைத் தலைவர் டி. ராஜேந்திரன் தலைமையிலும், கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர் கே.சி.பழனிச்சாமி, கழக நெசவாளர் அணி தலைவர் நன்னியூர் ராஜேந்திரன், கழக சட்டத்துறை இணைச் செயலாளர் என். மணிராஜ், கழக நெசவாளர் அணி செயலாளர் பரணி கே.மணி, குளித்தலை சட்டமன்ற உறுப்பினர் இரா.மாணிக்கம் MLA, அரவக்குறிச்சி சட்டமன்ற உறுப்பினர் பி. ஆர். இளங்கோ MLA, கிருஷ்ணராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் க.சிவகாம சுந்தரி MLA, கழக கொள்கை பரப்பு துணைச் செயலாளர் கரூர் முரளி, கழக சிறுபான்மை பிரிவு துணை செயலாளர் முனவர் ஜான், கழக வர்த்தக அணி துணை செயலாளர் வே.பல்லவி ராஜா, கழக தொழிலாளர் அணி துணை செயலாளர் பி.விஜயகுமார் ஆகியோர் முன்னிலையிலும் நடைபெறுகிறது.

அதுசமயம் மாநில நிர்வாகிகள், சட்டமன்றத் தொகுதி பார்வையாளர்கள், மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், கழக பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர, பகுதி, ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள்பொறுப்பாளர்கள், மாநகர, பகுதி, ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள், மாவட்ட, மாநகர, பகுதி, நகர, ஒன்றிய, பேரூர் அனைத்து அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், BLA2, BDA( பூத் IT Wing), பூத் ஒருங்கிணைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள் : 1. என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச் சாவடி பரப்புரை பயிற்சிக் கூட்டம்

2. S.I.R. வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் குறித்து

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# மதுரை மாநகர் மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ. அறிவிப்பு !



மதுரை, அக். 29 -

மதுரை மாநகர் மாவட்டக் கழகச் செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

மதுரை மாநகர் மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம் 02.11.2025 ஞாயிற்றுக்கிழமை அன்று மாலை 05.00 மணி அளவில் அண்ணாநகர் ட்வின்ஸ் மஹாலில், அவைத்தலைவர் மா.ஒச்சுபாலு தலைமையில் நடைபெறுகிறது.

எனவே மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதி கழக, வட்டக் கழக செயலாளர்கள், அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள் அனைவரும் தவறாது கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பொருள் :

"என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி" பயிற்சிக் கூட்டம் !

கழக ஆக்க பணிகள்

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

### செங்கோட்டை, நாகர்கோவில் ரயில் உள்பட

# 5 ரயில்களில் பயணிகளின் வசதிக்காக கூடுதல் பெட்டிகள் இணைப்பு!

சென்னை, அக். 29 -

பயணிகளின் வசதிக்காக, தாம்பரத்தில் இருந்து செங்கோட்டை, நாகர்கோவிலுக்கு இயக்கப்படும் விரைவு ரயில்களில் தலா 7 பெட்டிகள் கூடுதலாக இணைக்கப்பட உள்ளன. தெற்கு ரயில்வேயில் முக்கிய வழித்தடங்களில் பயணிகளின் தேவைகள் அடிப்படையில் கூடுதல் பெட்டிகள் இணைக்கப்படுகின்றன. அந்தவகையில், 5 விரைவு ரயில்களில் தற்காலிகமாக கூடுதல் பெட்டிகள் இணைந்து, இயக்கப்பட உள்ளன.

இதன்படி, தாம்பரம் செங்கோட்டை இடையே இயக்கப்படும் சிலம்பு அதிவிரைவு ரயிலில் தற்காலிகமாக 7 பெட்டிகள் இணைக்கப்பட உள்ளன.

அதாவது, தலா ஒரு ஏசி 2 அடுக்கு மற்றும் இரண்டாம் வகுப்பு பொதுப் பெட்டியும், இரண்டு மூன்றடுக்கு ஏசி பெட்டிகளும், 3 இரண்டாம் வகுப்பு தூங்கும் வசதி பெட்டிகளும் என 7 பெட்டிகள் கூடுதலாக இணைக்கப்பட உள்ளன. தாம்பரத்தில் இருந்து இயக்கப்படும் ரயிலில் நவ.1ம் தேதி முதலும், செங்கோட்டையில் இருந்து இயக்கப்படும் ரயிலில் நவ.2ம் தேதி முதலும் கூடுதல் பெட்டிகள் இணைக்கப்படவுள்ளன.

தாம்பரம் நாகர்கோவில் இடையே இயக்கப்படும் விரைவு ரயிலில் தலா ஒரு ஏசி இரண்டடுக்கு மற்றும் ஒரு பொதுப் பெட்டியும், இரண்டு மூன்றடுக்கு ஏசி பெட்டிகளும், 3 இரண்டாம் வகுப்பு தூங்கும் வசதி பெட்டிகளும் கூடுதலாக இணைத்து இயக்கப்பட உள்ளன. தாம்பரத்தில் இருந்து புறப்படும் ரயிலில் நவ.2ம் தேதி முதலும், நாகர்கோவிலில் இருந்து நவ.3ம் தேதி முதலும் இணைத்து இயக்கப்பட உள்ளன.

சென்னை சென்ட்ரல் திருவனந்தபுரம் சென்ட்ரல் இடையே இயக்கப்படும் அதிவிரைவு ரயிலில் ஒரு இரண்டடுக்கு ஏசி பெட்டி இணைத்து இயக்கப்பட உள்ளன. சென்னை சென்ட்ரலில் இருந்து புறப்படும் ரயிலில் நவ.3ம் தேதி முதலும், திருவனந்தபுரம் சென்ட்ரலில் இருந்து புறப்படும் ரயிலில் நவ.4ம் தேதி முதலும் இணைக்கப்பட உள்ளன.

இதுதவிர, சென்னை சென்ட்ரல் ஆலப்புழா இடையே இயக்கப்படும் அதிவிரைவு ரயில், கோயம்புத்தூர் ராமேசுவரம் இடையே இயக்கப்படும் ரயில் உள்ளிட்ட ரயில்களில் கூடுதல் பெட்டி இணைக்கப்பட உள்ளது.

இத்தகவல் தெற்கு ரயில்வே செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



தி.மு.க. இளைஞரணி அறக்கட்டளை சார்பில் வழங்கப்படும் மருத்துவ உதவித்தொகையை ஆவடி சட்டமன்ற தொகுதி பட்டாபிராம் பகுதியைச் சார்ந்த செல்வி ஸ்ரீநிதிக்கு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் 25 ஆயிரம் ரூபாய்க்கான காசோலையை வழங்கினார். உடன் மாநகரப் பொறுப்பாளர் சன்பிரகாஷ் மாநகர மேயர் ஜி.உதயகுமார், பகுதி கழக செயலாளர் ஜி.நாராயணபிரசாத், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் கே.சுரேஷ் குமார், மாநகர இளைஞர் அணி அமைப்பாளர் ஜி.துர்கா பிரசாத், துணை அமைப்பாளர் ரங்கநாதன், பகுதி அமைப்பாளர் டென்னிஸ் ராஜ், மற்றும் நிர்வாகிகள் இருந்தனர்.



சென்னையில் ஒன்றிய அரசின் சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகத்தின் செயலாளர் அமித் யாதவ் மற்றும் தமிழ்நாடு அரசு தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம் ஆகியோர் தலைமையில் நேற்று முன்தினம் (27.10.2025) 2026–2031 நிதி சுழற்சியாண்டுகளில் ஆதிதிராவிடர், இதர பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மாற்றுத்திறனாளிகள் நலத்திட்டங்களை செயல்படுத்துவது குறித்தும், அத்திட்டங்களில் மேற்கொள்ளப்பட வேண்டிய மாற்றங்கள் மற்றும் சீரமைப்பு குறித்த பரிந்துரைகள் மற்றும் கருத்துகளை கேட்டறிவதற்கும் தமிழ்நாடு அரசின் ஒத்துழைப்புடன் ஒன்றிய அரசு சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகத்தால் தமிழ்நாடு, கேரளா, ஆந்திரா, தலுங்கானா, கர்நாடகா மற்றும் புதுச்சேரி உள்ளிட்ட தென்மாநில தென்மாநில அளவிலான அளவிலான ஆய்வுக்கூ ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### "நலம் காக்கும் ஸ்டாலின்" திட்ட முகாம் — கடந்த வாரம் வரை 407 முகாம்கள்!

# 6,37,089 பேர் பயன்! 21,191 பேருக்கு மருத்துவக் காப்பீடு அட்டை!

## வளசரவாக்கத்தில் டி.ஆர்.பாலு எம்.பி. — அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆய்வில் தகவல்!

சென்னை, அக். 29 -

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் 25.10.2025 அன்று வளசரவாக்கம் மண்டலம், மதுரவாயல் ஸ்ரீ வெங்கடேஸ்வரா நகர், மேட்டுக்குப்பம் சாலை, பாரதி மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் நடைபெறும் "நலம் காக்கும் ஸ்டாலின்" திட்ட முகாமினை திருபெரும்பு தூர் நாடாளுமன்ற உறுப்பினர் டி.ஆர்.பாலு அவர்கள் தலைமையில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பில் பெறப்பட்ட மனுக்கள் மீது உடனடியாக தீர்வுக் காணும் வகையில் சான்றிதழ்கள் வழங்கப்பட்டது.

பிறகு அமைச்சர் மா.சுப்பிரமணியன் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-

**"நலம் காக்கும் ஸ்டாலின்" திட்ட முகாம் ஆய்வு**

நலம் காக்கும்ஸ்டாலின் எனும் மகத்தான திட்டம் 02.08.2025 அன்று சென்னையில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது. ஒவ்வொரு வாரம் சனிக்கிழமை அன்று தமிழ்நாட்டில்உள்ள 38 வருவாய் மாவட்டங்களிலும் இந்த முகாம் நடைபெறுகிறது. மேலும் இந்த முகாம் கடந்தவாரம் வரை 11 முகாம் என்கின்ற வகையில் இதுவரை 407 முகாம் நடத்தப்பட்டிருக்கிறது. இதில் 6,37,089 பேர் பயனடைந்திருக்கிறார்கள்.இந்த திட்டத்தை பொறுத்தவரை தமிழ்நாடு முழுவதும் 1256 முகாம்கள் நடத்திட இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சியில் 15 முகாம்களும், சென்னைக்குஅடுத்து10 இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் தொகை கொண்ட 5 மாநகராட்சிகளில் தலா 4 வீதம் 20 முகாம்கள் நடத்தப்படவிருக்கிறது 10 இலட்சத்திற்கும் குறைவான மக்கள் தொகை கொண்ட 19 மாநகராட்சிகளில் தலா 3 வீதம் 57 முகாம்கள் என்கின்ற அளவிலும், தமிழ்நாட்டில் உள்ள 388 வட்டாரங்களில் தலா 3 என்கின்ற வகையிலும் ஆக ஒட்டு மொத்தம் 1,256 முகாம்கள் நடத்தப்படும் என்று முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டுஇதுவரை 407 முகாம்கள் நடத்தப்பட்டிருக்கிறது. இத்திட்டம் மக்களை பெரிய அளவில் கவர்ந்திருக்கின்றது. இன்று இந்த முகாம் 12வது வாரமாக நடைபெற்று வருகிறது.

மேலும் இம்முகாமில் பொது மருத்துவம், குழந்தைகள் நல மருத்துவம், இருதய மருத்துவம், எலும்பியல் மருத்துவம், நரம்பியல் மருத்துவம், தோல் மருத்துவம், மகப்பேறியியல் மற்றும் மகளிர் நல மருத்துவம், கண் மருத்துவம், காது மூக்கு தொண்டை மருத்துவம், இயன்முறை மருத்துவம், பல் மருத்துவம், மனநல மருத்துவம், நுரையீரல் மருத்துவம், நீரிழிவு மருத்துவம், கதிரியக்கவியல் மருத்துவம், பொது அறுவை சிகிச்சை, சித்தா மற்றும் இந்திய முறை மருத்துவம் போன்ற 17 வகையான மருத்துவ முறைகள் இந்த முகாம்களில் நடத்தப்படவிருக்கிறது.

மேலும் தனியார் மருத்துவ மனைகளில் முழு உடற்பரிசோதனைகளுக்கு ரூ.20,000/- வரை செலவாகும். அரசு மருத்துவமனைகளில் கூட ரூ.4,000/- வரை செலவாகும். ஆனால் கட்டணமின்றி இந்த முகாமில் முழு உடற்பரி சோதனைகள் செய்யப்படுகிறது. இன்னொன்று மிக முக்கியமான சேவையாக அமைப்புச் சாரா தொழிலாளர்களுக்குதொழிலாளர் நல வாரியத்தின் மூலம் ஒவ்வொரு முகாமிற்கும் அழைத்து வரப்பட்டு அவர்களுக்குமுழு உடற்பரிசோதனை செய்யப்படுகிறது. அமைப்புச் சாரா தொழிலாளர்களுக்கு மிகப் பெரியசேவை செய்யப்படுவது என்பது இந்தியாவிலேயே தமிழ்நாட்டில்தான் முதல்முறை. மேலும்இந்த முகாம்களில் மாற்றுத்திறனாளிகளுக்கு சான்றிதழ்கள் தரப்பட்டு வருகிறது.

இந்த சான்றிதழ் பெறுவதற்கு மருத்துவர்களின் ஆலோசனை, மருத்துவர்களிடத்தில் அவர்களுக்கு எத்தனை சதவிகிதம் அளவிற்கு பாதிப்பு இருக்கின்றது என்று அறிந்து சான்றிதழ் வழங்குதல், தொடர்ந்து வருவாய் அளவில் சான்றிதழ் பிறகுதான் மாற்றுத்திறனாளி சான்றிதழ் பெற முடியும் என்கின்ற நிலை இருந்தது. எனவே மாற்றுத்திறனாளிகள் பல்வேறு அலுவலகங்களுக்கு சென்றுதான் இச்சான்றிதழ் பெறும் நிலை இருந்தது. அந்தவகையில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அந்தந்த பகுதிகளிலேயே நடைபெறுகின்ற முகாம்களில் மாற்றுத்திறனாளிகள் நேரிடையாக வருகை புரிந்து அவர்களுடைய மாற்றுத்திறன் அளவினை மருத்துவர்களிடம் காண்பித்து அன்றைய நாளிலேயே சான்றிதழ்கள் பெறும் நிலையினை தந்திருக்கிறார்கள். இதுவரை நடைபெற்றுள்ள 407 முகாம்கள் மூலம் 26,819 மாற்றுத்திறனாளிகளுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளது.

மேலும் முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீடு திட்டத்தைப் பொறுத்தவரை தமிழ்நாட்டில் 1.47 கோடி குடும்பங்கள் பயன் பெற்று வருகின்றனர். இருந்தாலும் புதியதாக குடும்பங்கள் இத்திட்டத்தில் பதிவு செய்தவுடன் அவர்களுக்கும் காப்பீடு அட்டைகள் உடனடியாக வழங்கப்பட்டு வருகிறது. அந்தவகையில் இதுவரை நடைபெற்றுள்ள 407 முகாம்களில் 21,191 குடும்பத்தினருக்குமருத்துவக் காப்பீடு அட்டை வழங்கப்பட்டுள்ளது. பெருநகர சென்னை மாநகராட்சியைப் பொறுத்தவரை 15 முகாம்கள் என்று அறிவிக்கப்பட்டு, கடந்த வாரம் வரை 6வது முகாமாக நடைபெற்றுள்ளது.இதுவரை 14,604 பேர் பயன் பெற்றிருக்கிறார்கள். இன்று 7வது முகாமாக திரும்பெரும்பு தூர்நாடாளுமன்ற உறுப்பினர் மதிப்பிற்குரிய அண்ணன் டி. ஆர்.பாலு அவர்கள் குத்துவிளக்குஏற்றி தொடங்கி வைத்து பல்வேறு சேவைகளை நேரிடையாக பார்வையிட்டு ஆய்வு செய்திருக்கிறார்கள்.

வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கை தொடர்பான கேள்விக்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஒவ்வொரு பருவமழைக்கு முன்பாகவும் எடுக்கப்பட வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து ஆலோசனைகள் வழங்கி வருகிறார்கள். அந்தவகையில் தான் பருவமழை காலங்களில் மிகப் பெரிய அளவில் வெள்ளப் பாதிப்புகளோ, நோய் பாதிப்புகளோ இல்லாத நிலை என்பது தமிழ்நாட்டில் இருந்து வருகிறது. கடந்த 20 நாட்களுக்கு முன்னாள் சென்னை ஓமந்தூரார் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு தலைமையில் முக்கிய சேவை துறைகளுடன் வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கை குறித்து ஒரு கூட்டம் சென்னையில் நடத்தப்பட்டு, 10க்கும் மேற்பட்ட துறை செயலாளர்கள் மற்றும் 30க்கும் மேற்பட்டமாவட்ட உயரலுவலர்கள் கலந்து கொண்ட இக்கூட்டத்தில் அந்தந்த மாவட்டத்தில் எடுக்கப்பட்ட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து குறிப்புகள் வழங்கப்பட்டுள்ளது. அவர்கள் அந்தந்த மாவட்டத்தில் பருவமழை தொடர்பாக எடுக்கப்பட்ட முன்னெச்ச ரிக்கைநடவடிக்கை எடுப்பார்கள்.

மேலும் ஒவ்வொரு ஆண்டும் மக்கள் நல்வாழ்வுத்துறை சார்பில் வடகிழக்கு பருவ மழையின் போது மருத்துவ முகாம்கள் 10,000 என்கின்ற வகையில் நடத்தப்பட்டு, ஏதாவது கிராமத்தில் 3க்கும் மேற்பட்ட காய்ச்சல் பாதிப்புகள் இருக்குமேயானால் அங்கு உடனடியாக மழைக்கால சிறப்பு முகாம்கள் நடத்தி ஒரு ஆண்டிற்குள்ளாகவே 27,000க்கும் மேற்பட்ட முகாம்கள் நடத்தப் பட்டிருக்கிறது. இப்போது தான் வடகிழக்கு பருவமழை தொடங்கி இருக்கிறது. நேற்றுவரை 17 செ.மீ அளவிற்கு மழை பெய்திருக்கிறது. பருவமழை கூடுதலாக பெய்யத் தொடங்கியவுடன்எவ்வளவு மருத்துவ முகாம்கள் நடத்தப்படும் என்கின்ற தகவல் பத்திரிக்கையாளர் களுக்கு தெரியப்படுத்தப்படும்.

**மக்களைத் தேடி மருத்துவம் திட்டம் தொடர்பான கேள்விக்கு**

மக்களைத் தேடி மருத்துவம் எனும் திட்டத்திற்கு செப்டம்பர் திங்கள் 25 ஆம் தேதி அமெரிக்கா ஐ.நா சபை பொதுக்கூட்டத்தில் முதல்முறையாக இந்தியாவில் இருக்கின்ற மாநில அரசின் ஒரு துறைக்கு united Nation intergrency Task Force Award என்கின்ற உலகளாவிய விருது வழங்கப்பட்டிருக்கிறது.இது இந்தியாவிற்கு கிடைத்திருக்கின்ற பெருமை. மக்களைத் தேடி மருத்துவத்தின் மூலம் இதுவரை பயனடைந்தவர்களின் எண்ணிக்கை 2,48,68,185 பேர், தொடர் சேவை பெற்றுள்ளவர்களின் எண்ணிக்கை 4,68,03,041 பேர்.

இவ்வாறு அமைச்சர் மா.சுப்பிரமணியன் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்கள்.

இந்நிகழ்வில் மதுரவாயல் சட்டமன்ற உறுப்பினர் காரப்பாக்கம் க.கணபதி, தெற்கு வட்டார துணை ஆணையாளர் அஃதாப் ரசூல், பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத்துறை இயக்குநர் மரு.சோமசுந்தரம், பெருநகர சென்னை மாநகராட்சி நிலைக்குழுத் தலைவர் (பொதுசுகாதாரம்) டாக்டர் கோ.சாந்தகுமாரி, வளசரவாக்கம் மண்டல குழு தலைவர் ராஜன், சென்னை அரசு கீழ்ப்பாக்கம் மருத்துவக்கல்லூரி முதல்வர் மரு.கவிதா மற்றும்உள்ளாட்சி பிரதிநிதிகள், மாநகராட்சி அலுவலர்கள், மருத்துவ மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அலுவலர்கள், மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும் பொதுமக்கள் பலர் உள்ளனர்.



காஞ்சிபுரம் ஒன்றியம் கீழ்கதிர்பூர் தனியார் பள்ளியில் பள்ளிக்கல்வித்துறை சார்பில் நடைபெற்ற மாவட்ட அளவிலான கலைத்திருவிழாவினை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி. கலைச்செல்வி மோகன் மாவட்டக் கழகச் செயலாளர் – உத்திரமேரூர் சட்டமன்ற உறுப்பினர் க.சுந்தர் ஆகியோர் தொடங்கி வைத்து பார்வையிட்டனர். உடன் மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் (பொறுப்பு) திருமதி.அ. நளினி காஞ்சிபுரம் ஒன்றிய குழு தலைவர் திருமதி . மலர்க்கொடி குமார் மாவட்ட ஊராட்சிகுழ துணைத் தலைவர் திருமதி. நித்யா சுகுமார் ஆகியோர் உள்ளனர்.